OS:180/2020

Date:07.06.2023

பெயர் : பழனிசாமி

**வாதி தரப்பு சாட்சி 3 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை:-**</u> 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்

நான் வெண்ணனன் பட்டியில் குடியிருக்கிறேன் என்பதை காட்ட எனது ஆதார் அட்டை அல்லது குடியிருப்பதை காட்டுவதற்கான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வெண்ணனன் பட்டியில் குடியிருக்காமலேயே அங்கு குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு யார் போட்டுள்ளார்கள் யார் மீது வழக்கு போடப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் முனியன், வேலுசாமி, வெள்ளையம்மாள், குப்பாயி, ஜெகநாதன், ரத்தினம், சின்னப்பன் ஆகியோர்கள் வழக்கு போட்டுள்ளார்கள். எனக்கு விவசாய நிலங்கள் வெண்ணனன் பட்டியில் இருப்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த சர்வே எண்ணில் நிலம் உள்ளது என்பதை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு வெண்ணனன் பட்டியில் நிலமே இல்லை என்பதால் தான் எனது நிலத்தின் சர்வே எண்ணை முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது ஆதார் அட்டை எண்ணை தான் குறிப்பிட்டுள்ளேன். எனது ஆதார் அட்டையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அதிலுள்ள முகவரியில் நான் வெண்ணனன் பட்டியில் குடியிருக்கவில்லை என்பது தெரிந்து விடும் அதனால்தான் ஆதார் அட்டை நகலினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு யார் யாருக்கு எதிராக இந்த வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் சமயா, பழனிசாமி, சின்னபொன்னு, மகேந்திரனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சமயா தற்போது எங்கு குடியிருக்கிறார் என்றால் ஆட்டையாம்பட்டி பக்கம் இருப்பதாக சொன்னார்கள். வாதிகளுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் என்ன முறையில் உறவு என்று தெரியுமா என்றால் நாகப்பன், முனிய கவுண்டன் இருவரும் அண்ணன் தம்பிகள். அவர்களுடன் வேறு உடன் பிறந்தவர்கள் உள்ளார்களா என்றால் எனக்கு

ஞாபகமில்லை. நாகப்பனுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் குப்பாயி என்பவர் இருப்பதாக சொன்னார்கள் நான் பார்த்ததில்லை. நாகப்பனுக்கு எத்தனை வாரிசுகள் என எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் ஒரே பெண் வாரிசு இருப்பதாக சொன்னார்கள். முனியகவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நைனாகவுண்டர், சின்னாகவுண்டர், பழனியப்பன், ரத்தினம், சின்னப்பன், மாணிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள். சின்னப்பனுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். அதில் ஜெகநாதன் பெயர் தெரியும், மற்றொரு மகளின் பெயர் சின்னபொன்னு, மற்ற இருவர் பெயர் தெரியாது. ரத்தினத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று மகன்கள், ஒரு மகள். வழக்கு சொத்தின் சர்வே எண்கள் மற்றும் விஷ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.180/4 ல் விஷ்தீரணம் 1 ஏக்கர் 90 செண்ட் ஆகும். வாதிகளின் நிலங்கள் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. வாதிகளுக்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் 10 ஏக்கரா நிலம் உள்ளது. வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் வாதிகளின் நிலம் உள்ளது என்றால் வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் நிலம் உள்ளது. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் முனியகவுண்டர் ஆதியில் ஓட்டிவந்தார். ரத்தினம் ஒரு வீடு கட்டியுள்ளதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் அது என்ன வீடு என்றால் கூரை வீடு. எத்தனை வருடத்திற்கு முன்பாக கட்டினார் என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டினார். மேற்படி வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு பெற்றுள்ளார். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு மின்இணைப்பு மேற்படி வீட்டிற்கு வாங்கப்பட்டது என்றால் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டது. வாதிகளின் நிலத்தை சுற்றி யார் யார் நிலம் உள்ளது என்றால் மேற்கே செட்டியார் நிலம் உள்ளது. வாதி நிலத்திற்கும் வடக்கு மற்றும் கிழக்கு பூசாரிவீட்டு குடும்பத்திற்கான நிலம் உள்ளது. வாதிகளின் நிலத்திற்கு தென்புறத்தில் யார் நிலம் உள்ளது என்றால் ஏரி புறம்போக்கு நிலம் உள்ளது. பூசாரி என்று நான் சொல்லும் நபரின் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. மேற்படி பூசாரி வீட்டு குடும்பத்திற்கு அந்த நிலம் கோவில் மானிய நிலமா சொந்த நிலமா என்றால் அவர்களுக்கு சொந்த நிலம் ஆகும். நான் வாதிகளின் குடும்பத்திற்கு உறவினர் என்பதால் வாதி குடும்பத்தை மட்டுமே தெரியும் என்றும், பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் வெண்ணனன் பட்டியில் குடியிருந்து வந்திருந்தால்

முனியகவுண்டரின் இரண்டு சகோதரர்கள் பற்றியும், அவரது வாரிசுகள் பற்றியும நான் மேற்படி ஊரில் குடியிருக்க வில்லை என்பதால்தான் மேற்படி வாரிசுகளை எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அவரது நிலங்களை வைத்திருக்கிறார்களா அல்லது ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார்களா என்றால் வாதிகள் அவர்களது நிலத்தை அப்படியே வைத்திருக்கிறார்கள். 1983 ல் வாதிகள் மற்றும் சமயாவின் பாட்டி குப்பாயி ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் ஊரில் குடியில்லாததால் மேற்படி விற்பனை செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சமயா, பழனிசாமி, சின்னபொன்னு ஆகியோர்கள் வாதிகளுடன் பேச்சுவார்த்தையில் உள்ளார்களா என்றால் பேச்சு வார்த்தையில் இல்லை. வரவும் இல்லை. சமயா கடைசியாக எப்போது வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் எப்போதும் ஊருக்கு வந்ததே இல்லை. சமயாவின் தந்தை பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. குப்பாயி உடன்பிறந்தவர்களான நாசக்கா, வீரம்மாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிகளை தவிர முனியகவுண்டருக்கு வாரிசுகள் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். மற்ற வாரிசுகள் ஏன் வழக்கு போடவில்லை என தெரியுமா என்றால் வீட்டிற்கு ஒருவர் வழக்கு போட்டுள்ளார்கள். தாவா சொத்துக்கள் குப்பாயிக்கு பாத்தியப்பட்டு குப்பாயியின் வாரிசுகள்தான் அனுபவித்து வந்தார்கள் தற்போது இந்த வாதிகள் அனுபவித்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வாதிகள் தான் தாவா சொத்தினை அனுபவித்து வந்திருந்தால் வாதிகள் அவர்கள் நிலத்துடன் சேர்த்து தாவா சொத்திற்கும் பட்டா வாங்கியிருக்க முடியும் ஆனால் பட்டாவானது குப்பாயி பெயரில் இருந்து வருவதால் வாதிகள் தாவா சொத்தினை அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ரத்தினம் எப்போதும் வீடு கட்டவில்லை ரத்தினம் அவரது பூர்வீக சொத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தாவா சொத்தில் வீடு இருப்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னப்பன் எங்கு வீடு கட்டியுள்ளார் என்றால் ஊருக்குள் வீடு கட்டியுள்ளார். சின்னப்பன் என்ன வீட்டில் குடியிருக்கிறார் என்றால் கூரை வீட்டில்

குடியிருக்கிறார். மூன்று வருடத்திற்கு முன்பாக மகேந்திரன் வந்தார் என சொல்லியுள்ளேன் மகேந்திரனை பார்த்துள்ளேனா என்றால் தகராறு செய்யும்போது வந்து பார்த்தேன். மாதம், தேதி எதுவும் எனக்கு தெரியாது. மகேந்திரன் வந்தது சம்மந்தமாக புகார் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் மகேந்திரன் அதன் பின்பு காட்டுப்பக்கம் வரவில்லை. நான் சொல்வது போல் மூன்று வருடத்திற்கு முன்பாக மகேந்திரன் வந்து சொத்தில் தகராறு ஏதும் செய்யவில்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மகேந்திரன் சொத்தினை கிரயம் வாங்கிய தேதியிலிருந்து சொத்தினை அனுபவித்து வருகிறார். வாதிகள்தான் மகேந்திரனிடமிருந்து சொத்துக்களை எடுக்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கினை பொய்யான சங்கதிளை கூறி தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்க்கத்தக்கல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-PW3

ஒப்பம்/-சார்பு நீதிபதி, ஓமலூர்.